**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.42/19** P.W. 9

Deposition of witness for Prosecution:

| | | | |
|---|---|---|---|
| Name | :திருமதி. வசந்தா | Father's / Husband Name . பாண்டியன் | |
| Village | : | Taluk | : |
| Religion | : | Age | : |
| Date | :05.09.2019 | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 05.09.2019.

**முதல் விசாரணை.**

நான் தற்பொழுது செண்பகராயநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்துவருகிறேன். அசா.1ஐ தெரியும். எதிரி சக்திவேலை தெரியும். வழக்கு சம்பவம் குறித்து எனக்கு ஒன்றும் தெரியாது. போலிசார் என்னை சாட்சியாக விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வேண்டுகோளுகிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை.**

போலிசார் விசாரணையின்போது 11.10.2010 அன்று பகல் 11.45 மணியளவில் நான் என் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தபோது அசா.2 பன்னீர்செல்வம் வீட்டில் இருந்து அலரல் சத்தம் கேட்டது என்றும் அங்கு சென்று பார்த்தபோது எதிரிகள் கையில் கடப்பாறை மற்றும் கட்டையுடன் ஓடிக்கொண்டிருந்தார்கள் என்றும் அசா.2 பன்னீர்செல்வம் மயங்கிய நிலையில் இடது பக்க தலையில் காயத்துடன் கிடந்ததாகவும் அவரை விசாரித்தபோது ஆஜர் எதிரிகள் இரும்பு பாறையாலும் கட்டையாலும் அசா.2 பன்னீர்செல்வத்தை தாக்கியதாக சொன்னதாக போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது சம்பவம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும் தன்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றும் உண்மை சம்பவத்தை மறைத்து எதிரிக்கு ஆதரவாக எதிரி சக்திவேல் எனது பங்காளி முறை என்பதால் அவரை இந்த வழக்கில் இருந்து காப்பாற்ற அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் முன்வைக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிதரப்புக் குறுக்கு விசாரணை.**

பன்னீர்செல்வம், விஜயா ஆகியோரும் எனக்கு நெருங்கிய பங்காளி முறைதான் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**